ஆக்கம்: ஆசிரியை K. கிருஷ்ணவேனி
கேே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## கும்பாபிஷேகம்

1. 'பிர' என்ற சொல்லின் பொருள்.
   I. நிற்றல் II. நன்கு III. நன்குபுலனாகும் IV. பிரவினை
2. ஒருவர் தன் நலத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு செய்யும் கிரியை.
   I. நித்தியக்கிரியை II. நைமித்தியக்கிரியை III. சாந்திக் கிரியை IV. காமிகக்கிரியை
3. எல்லா உயிர்களும் குறைவின்றி வாழ்தற் பொருட்டு செய்யப்படும் கிரியை.
   I. அன்னதானம் II. யாகம் III. பெருஞ்சாந்தி IV. வாஸ்து சாந்தி
4. பிரதிஷ்டை எத்தனை வகைப்படும்?
   I. மூன்று II. நான்கு III. இரண்டு IV. ஐந்து
5. சுபமுகூர்த்த நிர்ணயம் இல்லாத கிரியை.
   I. அநாவர்ணம் II. ஆவர்த்தனம் III. புனராவர்த்தனம் IV. அந்தரிதம்
6. மண்டலாபிஷேகம் எத்தனை தினங்களைக் கொண்டது?
   I. 40 II. 48 III. 60 IV. 100
7. சராசரி ஒரு மண்டலம் எத்தனை நாட்களைக் கொண்டது?
   I. 48 II. 40 III. 45 IV. 50
8. போர், இயற்கை அனர்த்தங்களால் அழிந்த ஆலயத்தை புதிதாக நிர்மானித்தல்
   I. புனர்நிர்மாணம் II. ஆசார்யவரணம் III. ஆவர்த்தனம் IV. பிரதிஷ்டை
9. ஆலயத்தில் இறப்பு, தீட்டுக்குரிய வழிபாட்டு முறை
   I. அபரக்கிரியை II. சிரார்த்தம் III. அந்தரிதம் IV. ஆவர்த்தனம்
10. சுப முகூர்த்தம் நிர்ணத்துள் அடங்கும் கிரியை
    I. புனராவர்த்தனம் II. அந்தரிதம்
    III. ஆலயத்தில் இறப்பு ஏற்படல் IV. ஆலயத்தில் தீட்டு ஏற்படல்

**விடை எழுதுக.**

1. பெருஞ்சாந்தி என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
2. பிரதிஷ்டையின் நான்கு வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக.
3. ஆசார்ய வரணம் என்றால் என்ன?
4. பிரதிஷ்டா குருவிடம் காணப்படவேண்டிய இலட்சணங்கள் எவை?
5. மண்டலாபிஷேகம் என்றால் என்ன?